*Journal of Sri Lanka Library Review, Volume 36, Issue I1, June 2022, 100-120*
*DOI:http://doi.org/10.4038/sllr.v36i2.55*

# Challenges facing in Organizing Modern Geography Textbooks usingDewey Decimal Classification System: An analytical study

Visakaruban, M.[1],Poologanathan, P.[2],Sajanthan, K.[3],Kesavan, Y.[4]

## Abstract

*The Dewey Decimal Classification System* is the basic standard used to organize the information resources collected in libraries. This classification method organizes the universal knowledge using Hindu-Arabic numerals from *000 to 999*. In this regard, there are some problems in organizing Geography textbooks.Especiallytoday; the Geography curriculum found in the University curriculum has expanded and developed into anInterdisciplinary Science filed that incorporates various other disciplines. However, the Geography textbooks cannot be organized into a single volume within the given numerical codes 910 and 913-919, which was refered by the *Dewey Decimal Classification System*. Modern Geography textbooks are not organized in a number construction like Philosophy, Religion and Art. For example, the branches of Human Geography include Political Geography;Cultural Geography and Economic Geography, which have to be organized under the main category of Social Science (300). Similarly, the main branches of Physical Geography are Topography, Geomorphology and Meteorology, Climate Geography, Atmosphere and Rocks, and

[1]Senior Assistant Librarian, University of Jaffna,
Email: mvisakaruban@yahoo.com https://orcid.org/0000-0001-5878-8011
[2]Assistant Librarian, University of Jaffna,
Email: poologan@univ.jfn.ac.lk https://orcid.org/0000-0002-7084-5688
[3]Assistant Librarian, University of Jaffna,
Email,ksajanthan@univ.jfn.ac.lk https://orcid.org/ 0000-0001-7963-2454
[4]Assistant Librarian, University of Jaffna,
Email: ykesavan@univ.jfn.ac.lk https://orcid.org/ 0000-0003-1461-3046

Received: 25February2022, Accepted revised version : 30May 2022
This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License.

Oceanography have to be organized under the main category of Science (500). The primary purpose of this study is to identify the Geographical textbooks scattered in different places and propose strategies that will make it easier for the reader to meet their needs. For this research, descriptive methods were used. This study recommends that the library shall develeop and maintain an 'Athority File of Subject Headings'toorganize the Geography Textbooks. Particulalrlythis research concludes that organizing Geography textbooks under the Class code 550 will be a solution to bring the Geography textbook under one umbrella for the readers rather than organizing the Geography textbooks under the DDC's given main category (910).

**Keywords:** Geography, Human Geography, Physical Geography, Deweydecimal classification System and Climate Geography

*Journal of Sri Lanka Library Review, Volume 36, Issue I1, June 2022, 100-120*
*DOI:http://doi.org/10.4038/sllr.v36i2.55*

# நவீன புவியியல் கற்கை நெறிசார் பாட நூல்களை தூயிதசம பகுப்பாக்க அடிப்படையில் ஒழுங்கமைத்தலில் எதிர்நோக்கப்படும் சவால்கள் - ஓர் பகுப்பாய்வு

## ஆய்வுச் சுருக்கம்

நூலகங்களில் சேகரிக்கப்படுகின்ற தகவல் சாதனங்களை ஒழுங்கமைத்துக் கொள்ள பயன்படுத்தப்படுகின்ற அடிப்படை நியமமாக தூயிதசம பகுப்பாக்க திட்டம் அமைந்துள்ளது. இப்பகுப்பாக்கம் இந்து-அராபிய எண்களை 000 தொடக்கம் 999 வரை பயன்படுத்தி அறிவுப்பிரபஞ்சத்தை ஒழுங்கமைக்கும் முறையைக் குறிப்பிடுகின்றது. இதனடிப்படையில் புவியியல் சார்ந்த பாடநூல்களை ஒழுங்கமைக்கும் பொழுது சில சிக்கல்கள் இங்கு இடம்பெறுகின்றன. குறிப்பாக இன்று பல்கலைக்கழக பாடத்திட்டத்தில் காணப்படும் புவியியல் பாடநெறியானது தன்னுள் பரந்து விரிந்து பல்வேறு ஏனைய துறைகளையும் உள்ளீர்த்த ஒரு நவீன அறிவியலாக வளர்ச்சி கண்டுள்ளது. ஆனால் புவியியலுக்காக தூயி தசம பகுப்பாக்கம் குறிப்பிடும் எண் குறியீடுகளான 910 மற்றும் 913-919 வரையான குறியீடுகளுக்குள் புவியியல் பாடநூல்களை ஒரே தொகுதியாக ஒழுங்கமைக்க முடியாதுள்ளது. அதாவது தத்துவம், சமயம,; கலை போன்றவற்றிற்கு ஒரு சீரான எண் கட்டுமானம் காணப்படுவது போன்று நவீன புவியியல்சார் பாடநூல்களுக்கு காணப்படவில்லை. எடுத்துக்காட்டாக மானிடப் புவியியலின் கிளைகளான அரசியல்புவியியல்,கலாசார புவியியல,; குடித்தொகை, பொருளாதார புவியியல் முதலானவற்றை விளக்கும் நூல்களைச் சமூக அறியியல் (300) என்ற பிரதான வகுப்பின் கீழ் ஒழுங்கமைக்க வேண்டியுள்ளது. அவ்வாறே பௌதிகப் புவியியலின் முக்கிய கிளைகளான நிலவரைபடவியல்,நிலஅளவையியல், நிலஉருவவியல,; காலநிலையியல், நில உருவவியல,; வளிமண்டலம், பாறைகள,; மண்ணியல, சமுத்திரவியல் போன்றவற்றை அறிவியல் (500) என்ற பிரதான வகுப்பின் கீழ் ஒழுங்கமைக்க வேண்டியுள்ளது. இவ்வாறு வெள;வேறு இடங்களில் சிதறிய நிலையில் காணப்படும் புவியியல்

சார்ந்த பாடநூல்களின் இட அமைவை இனங்கண்டு விளக்குவதுடன் அதனை சீரான முறையில் ஒழுங்கமைத்தலில் ஏற்படுகின்ற சவால்களை முன்மொழிவதும் மற்றும் வெள;வேறு இடங்களில் காணப்படும் இத்தகவல் மூலங்களை வாசகர் இலகுவாகப் பெற்றுக் கொள்வதற்கான தந்திரோபாயங்களை முன்மொழிவதும் இவ்வாய்வின் பிரதான நோக்கமாக அமைகின்றது. இவ்வாய்வினை நேர்த்தியான முறையில் வடிவமைப்பதற்கு விவரண ஆய்வு முறையியல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாய்வானது புவியியல் சார்ந்த பாட நூல்களை புவியியலுக்கான பிரதான 910 வகுப்பின் கீழ் ஒழுங்கமைத்துக் கொள்வதை விட 550 என்ற வகுப்பின் கீழ் பௌதிகப் புவியியல் சார்ந்த நூல்களை ஒழுங்கமைக்கும் போது; புவியியலுக்கான நூல்களை பெருமளவிற்கு ஒரே தொகுதியாகப் பேணக்கூடிய வாய்ப்பு ஏற்படும் என்பதை பரிந்துரைசெய்கின்றது. மேலும்,நூலகங்கள் இதில் எந்தக் குறியீடுகளைப் பயன்படுத்த உள்ளது என்பதை விடய அதிகாரக் கோவையாக (Authority File of Subject Heading) எழுத்து நிலையில் பேணுதல் வேண்டும். புவியியல் சார்ந்த நூல்களை ஒருசீரான முறையில் ஒழுங்கமைத்துக் கொள்ள இத்தகைய விடய அதிகாரக் கோவை அவசியமானது.

**திறவுச் சொற்கள்**: புவியியல்>தூயிதசம பகுப்பாக்கம்>; மானிட புவியியல்,பௌதிப்புவியியல், படவரைகலையியல்.

*Journal of Sri Lanka Library Review, Volume 36, Issue I1, June 2022, 100-120*
*DOI:http://doi.org/10.4038/sllr.v36i2.55*

## I. அறிமுகம்

நூலகப் பகுப்பாக்கம் என்பது நூலகத்திலே சேகரிக்கப்பட்ட நூல்களை அது கூறும் பொருளின் அடிப்படையில் நூல் இறாக்கைகளிலே அடுக்கி வைத்தலைக் குறிக்கும் செயற்பாடாகும். அதாவது நூல்கள் ஒவ்வொன்றினதும் உட்பொருளை நன்கு விளங்கிய நிலையில் அவற்றிற்கான குறியீடுகளை வழங்கி ஒத்த பொருள் கொண்ட எல்லா நூல்களையும் ஒன்றாக நூல் இறாக்கைகளிலே அடுக்கி வைக்கின்ற ஒரு கலையாக நூலகப் பகுப்பாக்கம் அமைகின்றது. இத்தகைய ஒரு பயன்பாடு கொண்ட உலகப் பொது நியமமாகத் தூயிதசமப் பகுப்பாக்க முறை (*Dewey Decimal Classification System*) நூலகவியலில் நீண்ட காலமாகப் பயன்பட்டு வருகின்றது. நூல்களைப் பகுப்பாக்கம் செய்வதற்கு மெல்வில் தூயி *(Melvil Dewey)*என்பவரால் 1876 ல் இந்நியமம் வெளியிடப்பட்டது. இது பல்வேறு பதிப்புக்களாக இன்று வெளிவந்து கொண்டிருக்கின்றது. இது இந்து-அராபிய எண்களைக் குறியீடுகளாகப் பயன்படுத்தி உலக அறிவுத் தொகுதி முழுமையையும் 000 – 999 என்ற பிரதான எண் கட்டுமானத்தினுள் தசம அடிப்படையில் ஒழுங்கமைத்துள்ள ஒரு பகுப்பாக்கத்திட்டமாகப் பயன்படுகின்றது. தூயி பகுப்புத் திட்டத்தில் உலக அறிவு விடயங்கள் அனைத்தும் பத்துப் பிரதான துறைகளாகப் பகுக்கப்பட்டுள்ளது (Dewey, 2011).

இத்தூயி தசம பகுப்பாக்க திட்டமானது இன்றைய புவியியல் பாடப்பரப்பில் காணப்படும் நூல்களை ஒழுங்கமைப்பதற்காக பின்வரும் குறியீடுகளை குறிப்பிடுகின்றது. குறிப்பாக புவியியலில் இடம்பெறும் கற்கோளம் (Lithosphere),உயிர்க்கோளம் (Biosphere), நீர்க்கோளம் (Hydrosphere),வளிக் கோளம் (Atmosphere),பூமியதிர்ச்சி (Earth Quick), சார்ந்த தகவல் மூலங்களை DDCயின் 551 எனும் பெரும் பரப்பினுள்ளும் அதனுள் காணப்படும் துணை பிரிப்புகளுக்குள்ளும் உள்ளடக்குமாறு வற்புறுத்துகின்றது. அவ்வாறே தூயி தசமப் பகுப்பாக்கத்தில் பத்தாவது பிரதான துறையாக 900 என்ற குறியீட்டின் கீழ் புவியியல் மற்றும் வரலாறு சார்ந்த உட்கருத்துக்களைக் கொண்ட நூல்களை ஒழுங்கமைக்குமாறு தூயி தசமப் பகுப்பாக்கத்திட்டம்

குறிப்பிடுகின்றது. இதிலும் 900 – 909 வரை வரலாறு சார்ந்த பிரிவுகளைக் குறிப்பிடும் தூயி, 910 என்ற குறியீட்டினுள்ளும் புவியியல் மற்றும் பிரயாணம் (Geography and Travel) ஆகிய விடயங்களை ஒழுங்கமைக்குமாறு அறிவுறுத்தியள்ளது. 910.02 எனும் குறியீட்டில் பௌதிகப் புவியியல் (Physical Geography)நூல்களையும் 911 எனும் குறியீட்டில் வரலாற்றுப் புவியியலையும் (Historical Geography)ஒழுங்கமைக்குமாறு இந்நியமத்தில் அறிவுறுத்தப்படுகின்றது. 912ல் தேசப்படங்கள், வரைபுகள் முதலானவற்றை ஒழுங்கமைக்குமாறு குறிப்பிட்டுள்ளதுடன் 913ல் புவியியல் மற்றும் பிரயாண நூல்களை ஒழுங்கமைக்குமாறு குறிப்பிடுகின்றது.மேலும் 914 - 919 வரையான குறியீடுகளில் முறையே ஐரோப்பியப் புவியியலும் பிரயாணமும,; ஆசியப்புவியியலும் பிரயாணமும,; ஆபிரிக்கப்புவியியலும் பிரயாணமும், வடஅமெரிக்க மற்றும் தென்அமெரிக்கப் புவியியல்களும் பிரயாணமும் என்ற ஒழுங்கில் நூல்களை ஒழுங்கமைக்கத் தூயி தசமப்பகுப்பாக்கம் இடமளித்துள்ளது. இதன்படி 900 – 919 என்ற குறியீடுகளின் கீழ் வரலாறு,புவியியல்,சுற்றுலா,தேசப்படங்கள் நாடுகளின் அல்லது கண்டங்களின் புவியியல் என்றவாறான பாடநூல்களை ஒழுங்கமைக்கும் தன்மை நூலகங்களில் உள்ளது. அதுபோன்று புவியியலின் ஒரு பகுதியான மானிடப் புவியியல்சார்ந்த நூல்களை 304.6,320-328 மற்றும் 330-339 பேன்ற குறியீடுகளில் ஒழுங்கமைக்குமாறும் (Dewey, 2011).

இவ்வாறு ஓர் நூலகத்தில் வெவ்வேறு இடங்களில் பாரிய இடைவெளி வித்தியாசங்களில் சிதறிய நிலையில் காணப்படும் புவியியல் கற்கைக்கு உதவக் கூடிய தகவல் மூலங்களை இனங்கண்டு விளக்குவதுடன்; அதனை சீரான முறையில் ஒழுங்கமைத்தல் பற்றியும் மற்றும் வாசகர்கள் அதனை இலகுவாக அடைந்து கொள்ளவதற்குரிய பரிந்துரைகளை வழங்குவதாகவும் இவ்வாய்வு அமைகின்றது.

## II. ஆய்வுப் பிரச்சினை

நவீன புவியியல் கற்கை நெறியின் வியாபகத்திற்கு ஏற்ப புவியியல் என்ற பாடத்துறைக்குரிய நூல்கள் வெவ்வேறு இடங்களில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. இத்தகைய நூல்களை ஒரே பிரதம வகுப்பின் கீழ் ஒரு தொகுதியாக ஒழுங்கமைக்க முடியவில்லை என்பது இவ்வாய்வின் பிரச்சினைக்குரிய விடயமாகும்.

## III. ஆய்வின் நோக்கம்

இவ் ஆய்வானது பின்வரும் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு கொள்கின்றது.

I. புவியியல் கற்கை நெறிசார் பாட நூல்களை தூயிதசம பகுப்பாக்க அடிப்படையில் ஒழுங்கமைக்கின்ற பொழுது எதிர்நோக்கப்படும் சவால்களை முன்மொழிவது பிரதான நோக்கமாகும்.
II. நவீன புவியியல்சார் நூல்கள் தற்பொழுது நூலகங்களில் எந்தெந்தப் பிரதம பகுப்பின் கீழ் ஒழுங்கமைக்கப்படுகின்றது என்பதனை இனங்காணுதல்.
III. புவியியல் பாடநூல்களைக் கருத்துள்ள வகையில் ஒழுங்கமைக்கக் கூடிய நுட்பங்களை முன்வைத்தல்.
IV. அத்துறைசார்ந்த வாசகர்களின் உச்ச பயன்பாட்டிற்கு உதவும் வகையிலான தேடல் உத்திகளையும் தந்திரோபாயங்களையும் முன்மொழிதல்.

## IV. ஆய்வு முறையியல்

இவ்வாய்வானது பகுப்பாய்வு முறை (Analytical Method) மற்றும் விமர்சன ரீதியாக ஆய்வினை மேற்கொள்வதற்கு விபரண முறையியல் (Descriptive Method) என்பவற்றை பயன்படுத்துவதுடன் இவ்வாய்வுக்குரிய தரவுகள் யாவும் முதல்நிலை மற்றும் இரண்டாம் நிலை தரவுகளாகப் பெறப்பட்டு ஆய்வு வடிவமைக்கப்படுகிறது. முதல்நிலை தரவு மூலங்களாக,

DDC 22nd edition
DDC23rd edition

என்பன பயன்படுத்தப்படுவதுடன் இரண்டாம் நிலை தரவுகளாக இவ்வாய்வு சார்ந்து வெளிவந்த தேர்ந்தெடுக்கப்பட்ட சில ஆய்வுக் கட்டுரைகள் மற்றும் நூல் தரவுகள்,இணையத்தளத் தரவுகளைப் பயன்படுத்தி இவ்வாய்வு முன்னெடுக்கப்படுகின்றது.

## V. பகுப்பாய்வு விளக்கம்

புவியியல் என்னும் பாடநெறியின் ஆரம்பம் பூமியின் பௌதிகக் காட்சிகளையும் அதன் மேற்பரப்பையும் விபரிப்பதாக இருந்துள்ளது. பௌதிகப் புவியியல் பற்றிய சிந்தனையே இத்துறையில் முந்தியதாக இருந்துள்ளது. பின்னர் இக்கருத்து நிலையில் படிப்படியான மாற்றங்கள் ஏற்பட்டன. முக்கியமான புவியியல் காரணிகளுள் மனிதனும் அடங்குவான் என்ற சிந்தனை இத்துறை சார்ந்து வளர்த் தெடுக்கப்பட்டது. 1891ம்ஆண்டில் மானிடப்புவியியல் என்னும் பதம் முதன்முதலில் பயன்படுத்தப்பட்டதாக அறியப்படுகின்றது (குணராசா, 1997).

இதன்படி நோக்கும் போது பௌதிகப் புவியியல் சிந்தனையே புவியியலில் முந்தியதாகவும் மானிடப் புவியியல் என்ற கருத்துநிலை பிந்தியதாகவும் வளர்ந்துள்ளது என்பது பெறப்படுகின்றது.

### அ. பௌதிகப் புவியியலும் அதன் கிளைகளும்

பூமியின் மேற்பரப்புப் பற்றிய ஆய்வே பௌதிகப்புவியியல் ஆகும். பொதுவாக புவியின் மேற்பரப்பு பின்வரும் நான்கு உப தொகுதிகளைக் கொண்டமைந்தது (அன்ரனி நோர்பேட், 2014).

I. கற்கோளம்/நிலக்கோளம் - Lithosphere
II. வளிமண்டலம் /வளிக்கோளம் - Atmosphere
III. நீர்க்கோளம் - Hydrosphere
IV. உயிர்க்கோளம் - Biosphere

புவியின் மேற்பரப்பிலுள்ள கற்கோளம், வளிக்கோளம், நீர்க்கோளம் மற்றும் உயிர்க்கோளம் என்ற நான்கு உப தொகுதிகளுக்குமிடையில் இடைத் தொடர்புகள் உள்ளன. பௌதிகப் புவியியலின் விடய

*Journal of Sri Lanka Library Review, Volume 36, Issue I1, June 2022, 100-120*
*DOI:http://doi.org/10.4038/sllr.v36i2.55*

உள்ளடக்கத்தைப் பின்வரும் அட்டவணை விளக்குகின்றது(அன்ரனி நோர்பேட், 2017).

**அட்டவணை1: பௌதிகப் புவியியலின் உபபிரிவுகள்**

<table>
<tr><td rowspan="8">பௌதிகப் புவியியல்;</td><td>புவிவெளியுருவவியல்;</td><td colspan="3">புவிச்சரிதவியல்</td></tr>
<tr><td>காலநிலையியல்</td><td colspan="3">வளிமண்டலவியல்</td></tr>
<tr><td>தாவரப் புவியியல்</td><td rowspan="3">உயிரினப் புவியியல் உயிரிய ல்Gtpapay;</td><td rowspan="3">உயிரியல்</td><td>தாவரவியல்</td></tr>
<tr><td rowspan="2">விலங்குப் புவியியல்</td><td>விலங்கியல்</td></tr>
<tr><td>உயிர்ச் சூழலியல்</td></tr>
<tr><td>மட் புவியியல்</td><td colspan="3">மண்ணியல்</td></tr>
<tr><td>கடல்சார் புவியியல்</td><td colspan="3">சமுத்திரவியல்</td></tr>
<tr><td>நீர் வளங்கள்</td><td colspan="3">நீரியல்</td></tr>
</table>

மூலம்: **அன்ரனி நோர்பேட், எஸ்.** (**2017).பௌதிகப் புவியியல்**.

பௌதிகப் புவியியலின் அடிப்படையான அம்சங்களாக உள்ள இவற்றின் ஒழுங்கமைப்புக் குறித்து தூயி தசமப் பகுப்பாக்கம் புவிசார் அறிவியல் (Earth science) 550 என்ற பிரதான குறியீட்டின் கீழ் ஒழுங்கமைக்குமாறு அறிவுறுத்தியுள்ளது. இதன்படி புவிசார் அறிவியல் என்பதன் கீழ் பின்வரும் குறியீடுகளில் பௌதிகப் புவியியல் சார்ந்த பல நூல்கள் ஒழுங்கமைக்கப்பட வேண்டியவனாக உள்ளன (Dewey, 2011).

I. கற்கோளம் அல்லது நிலக்கோளம்-DDCகுறியீடு- 551
II. நீர்க்கோளம் -DDCகுறியீடு- 551.46
III. வளிக்கோளம் -DDC குறியீடு- 551.5

இன்னொரு நிலையில் பௌதிகப் புவியியலுக்கான ஒழுங்கமைப்பினை புவியியல் என்ற பிரதம பகுப்பு எண்ணின் 910.02 கீழும் ஒழுங்கமைக்க தூயிதசமப் பகுப்பில் இடமளிக்கப்பட்டுள்ளது (Dewey, 2011).

Journal of Sri Lanka Library Review, Volume 36, Issue I1, June 2022, 100-120
DOI:http://doi.org/10.4038/sllr.v36i2.55

இவ்வாறு ஒரே பாடப்பரப்புக்குரிய நூல்களை இருவேறு இடங்களில் ஒழுங்கமைப்பது தவறானது. எனவே பகுப்பாளர் இது தொடர்பில் தெளிவான தீர்மானத்தினை கொண்டிருக்கவேண்டிய அவசியம் காணப்படுகின்றது. DDC யின் 550 இன் கீழுள்ள குறியீடுகள் 910.2 எனும் குறியீட்டினை விட நுணுக்கமான முறையில் பகுப்பாக்கம் செய்யபபட்டுள்ளமையால் 550 இன் கீழ் ஒழுங்கமைப்பது தெளிவுக்குரியதாகவும் சிறப்புக்குரியதாகவும் காணப்படும்.

## 1) புவிவெளியுருவங்கள் (Geomorphology)

புவியின் வெளி நிலவுருவங்கள் அல்லது பௌதிக அம்சங்கள் பருமன் அடிப்படையில் ஒன்றிலிருந்து மற்றது வேறுபடுகின்றன. பாரியளவான நிலவுருவங்களானக் கண்டங்களும் சமுத்திரங்களும் காணப்படுகின்றன. கூடவே தீவுகள், கடல்கள், மலைத்தொடர்கள், மேட்டு நிலங்கள், சமவெளிகள், ஆறுகள், ஏரிகள் முதலானவை பற்றிய கற்கைகளையும் பௌதிகப் புவியியலின் உள்ளடக்கமாக உள்ளது.
இங்கு இனங்காணப்படக் கூடிய முக்கியமான சிக்கல் யாதெனில் தூயி தசமப் பகுப்பின் 913– 919 வரையான குறியீடுகளுக்குள் இத்தகைய கண்டங்களின் புவியியல் மற்றும் பிரயாணங்களைக் குறிப்பிடுமாறு அறிவுறுத்தியுள்ள அதேவேளை அதே படிமுறையினடிப்படையில் முறையே 554 – 559 வரை அதையொத்த நூல்களை ஒழுங்கமைக்க தூயியில் இடமளிக்கப்பட்டுள்ளமை இங்கு சுட்டிக் காட்டப்படத்தக்க விடயமாக உள்ளது (Dewey, 2011).

இங்கு புவியியல் (Geography) மற்றும் புவிச்சரிதவியல் (Earth science) என்ற இரண்டுமே பௌதிகப் புவியியல் என்ற பாடத்துறையை முதன்மைப்படுத்திக் கற்பிக்கப்படுவதனால் இந்த நூல்களுக்கான இட அமைவில் தெளிவான முறையில் தீர்மானிக்க வேண்டிய அவசியம் புவியியல் பாட நூல்களுக்கான ஒழுங்கமைப்பின் போது உணரப்படுகின்றது.

**2) உயிரினப் புவியியல்**

உயிரினப் புவியியல் (Biogeography) என்பதும் பௌதிகப் புவியியலின் இன்னொரு கிளை ஆகும். இது உலகில் காணப்படும் உயிரினங்களின் கடந்த கால மற்றும் நிகழ்காலப் பரம்பல் பற்றிய அறிவை உள்ளடக்கமாகக் கொண்டுள்ளது (அன்ரனி நோர்பேட்,2014). தாவரங்கள் மற்றும் விலங்குகள் போன்ற யாவற்றையும் ஒன்றிணைக்கின்ற முழுமையான உயிர்ச் சூழலியல் தொகுதிகளே உயிர்க்கோளம் (Biosphere)எனப்படுகின்றது (அன்ரனி நோர்பேட், 2014). இது தொடர்பிலான விடயங்களை உள்ளடக்கமாகக் கொண்ட உயிரினப் புவியியல் சார்ந்த பாடங்கள் தூயிதசமப் பகுப்பாக்கத்தில் உயிரியல் 578.9 என்ற துறையுடன் இணைத்து ஒழுங்கமைக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதாவது உயிரிகளின் இயற்கை வரலாறு (Natural history of organism) என்ற பாடத்துறைக்குள் ஒழுங்கமைக்குமாறு தூயிதசமப்பகுப்பில் காணப்படுகிறது (Dewey, 2011).

இவ்வாறு பௌதிகப் புவியியலின் நான்கு கூறுகளையும் நுணுக்கமான முறையில் அறிவியல் என்ற பாடத்துறையின் கீழ் ஒழுங்கமைக்குமாறு தூயிதசமப் பகுப்பு அறிவுறுத்தியுள்ள போதும் நூலகங்களில் 910.02 என்பதன் கீழ் அனைத்து நூல்களையும் ஒன்றாக அடுக்கிக் கொள்கின்ற தன்மையை அவதானிக்க முடிகின்றது. இதற்குக் காரணம் புவியியல் என்ற பதத்துடன் வெளிவருகின்ற நூல்களை 910.02 என்ற புவியியலின் பிரதான வகுப்பில் கீழ் ஒழுங்கமைக்க வேண்டுமெனப் பகுப்பாளர்கள் கருதுவதாக இருக்கலாம். அல்லது கலைத்துறைப் பாடமொன்றை அறிவியல் என்ற பாடத்துறையின் கீழ் ஒழுங்கமைப்பதில் தயக்கம் காட்டலாம்.

**3) படவரைகலையியல்**

படவரைகலையியல் (Cartography) பற்றிய அறிவு புவியியல் கற்கை நெறியில் பிரதானமானது நிலப்படங்களைத் தயாரிப்பது, அவற்றை வாசிப்பது மற்றும் பயன்படுத்துவது முதலான விடயங்கள்

*Journal of Sri Lanka Library Review, Volume 36, Issue I1, June 2022, 100-120*
*DOI:http://doi.org/10.4038/sllr.v36i2.55*

இக்கற்கையின் உள்ளடக்கமாக உள்ளன. இத்தகைய கற்கையை செய்முறைப் புவியியல் என்றும் குறிப்பிடுகின்றனர் (இராஜேஸ்வரன், 1997). நில அளவையியல் (Survey) தொடர்பான பாடங்களும் இப்பகுதியிலேயே மாணவர்களுக்குக் கற்பிக்கப்படுகிறது. இத்தகைய விடயப்பரப்புகளைக் கொண்ட பாடங்களை தூயிதசமப் பகுப்பாக்கம் 526 என்ற குறியீட்டினுள் ஒழுங்கமைக்குமாறு அறிவுறுத்துகின்றது. இதனைக் கணிதப் புவியியல் (Mathamatical Geography)என இப் பகுப்புத்திட்டம் குறிப்பிடுகின்றது.

தேசப்படம், தேசப்படத் தொகுதி, வரைபுகள், திட்டங்கள் முதலானவற்றின் ஒழுங்கமைப்புக்கு 912 என்ற குறியீட்டின் கீழும் தூயிதசமப்பகுப்புத் திட்டத்தில் இடம் வழங்கப்பட்டுள்ளமை இங்கு கருத்தில் கொள்ளப்பட வேண்டியதும் அதேவேளை தெளிவான தீர்மானம் எடுக்கப்பட வேண்டியதுமான விடயமாக உள்ளது.

**ஆ. மானிடப் புவியியலும் அதன் கிளைகளும்**

மானிடப் புவியியலின் இலக்கு மனிதன் புவியை எவ்வாறு பயன்படுத்தி வாழ்கிறான் என்பதைப் பற்றியதாக உள்ளது (குணராசா, 1997). மனிதனையும் அவனது பொருளாதார முயற்சிகளையும் கூடவே இப்பொருளாதார முயற்சிகளுக்கு ஏதுவாக அமையக் கூடிய காரணிகளான பண்பாடு மற்றும் பௌதிகச் சூழல் முதலானவற்றைப் பற்றிய விடயங்களை உள்ளடக்கமாகக் கொண்ட ஒரு கற்கையாக இது காணப்படுகின்றது.

புவியிலிருந்து மனிதன் பெறுகின்ற உற்பத்தி,நுகர்ச்சி,ஆகியவற்றையும் அவற்றின் அடிப்படையில் உருவாகிய சனத்தொகை,அதன் பரம்பல்,அடர்த்தி,குடியிருப்பு வகைகள் இடப்பெயர்ச்சி,மொழி,மத,இன வேறுபாடுகள் என இன்னோரன்னவற்றை மனிதனை மையமாகக் கொண்டு மானிடப் புவியியல் என்ற கற்கைத் துறை வளர்ச்சியடைந்துள்ளது.

*Journal of Sri Lanka Library Review, Volume 36, Issue I1, June 2022, 100-120*
*DOI:http://doi.org/10.4038/sllr.v36i2.55*

இந்த ஒரு அடிப்படையில் மானிடப் புவியியல் என்பதன் கிளைகளாகப் பின்வருவனவகைமாதிரிக்காகஇவ்ஆய்வில் எடுத்துக்காட்டப்படுகின்றது.

**1) சனத்தொகைப் புவியியல்**

சனத்தொகைப் புவியியல் என்பது (Population geography) சனத்தொகை,சனத்தொகையின்பருமன்,சனத்தொகை வளர்ச்சி,பரம்பல் பிறப்பு,இறப்பு,என்றவாறான கற்றலை உள்ளடக்கமாகக் கொண்டது. தூயிதசமப் பகுப்பாக்கத்தில் சமூக அறிவியல் என்ற பிரதான வகுப்பின் கீழ் 304.6 என்ற குறியீட்டிலே சனத்தொகை தொடர்பான நூல்கள் ஒழுங்கமைக்கப்படுகின்றன. புவியியல் சார்ந்த அறிவுடன் சனத்தொகை பற்றிய கற்றலுக்கான நூல்கள் 304.6 என்ற இட அமைவைப் பெறுகின்றன.

**2) பொருளாதாரப் புவியியல்**

பொருளாதாரப் புவியியல் (Economic geography) என்பது குறித்த புவியியற் பிரதேசம் ஒன்றின் பொருளாதாரம்,காலநிலை,வளங்கள் கிடைக்கும்தன்மை,நிலப்பயன்பாடு,போக்குவரத்து விவசாயம்,உற்பத்தி,அபிவிருத்தி என்ற மனிதனின் வாழ்வாதாரத்துடன் தொடர்புடைய பல்வேறு அம்சங்களையும் உள்ளீர்த்துள்ள ஒரு பாடத்துறையாக உள்ளது.

தூயிதசமப் பகுப்பாக்கத்தில் 330–339 வரையான குறியீடுகளில் பொருளியல் சார்ந்த நூல்கள் ஒழுங்கமைக்கப்படுகின்றன. பொருளாதாரப் புவியியலுக்கெனத் தனியான குறியீடு தூயி தசமப்பகுப்பாக்கத்தில் நேரடியாகக் கிடைக்காத நிலை உள்ளது. இதனால் பொருளாதாரப்புவியியல் சார்ந்த நூல்களை எங்கு தேடுவது என்ற விளக்கம் வாசகர்களுக்குத் தேவைப்படுகின்றது.

**3) அரசியல் புவியியல்**

அரசியல் புவியியல் (Political geography) என்பது நாடுகளின் புவியியல் அமைவிடத்தைப் பொறுத்து அங்கு எழக்கூடிய அரசியல் அம்சங்களை உள்ளடக்கமாகக் கொண்டதுறையாக உள்ளது. நாடுகள்,அந்நாடுகளின் கேந்திர முக்கியத்துவம் அதனால் எழக் கூடிய அரசியற் சூழ்நிலைகள் மாற்றங்கள்,நெருக்கடிகள் என்பன இத்துறையின் பாடப்பரப்புக்களாக அமையக் கூடியன.இத்தகைய பாடநூல்களும் கூட தூயிதசமப் பகுப்பின் 320–328 வரையான குறியீடுகளுக்குள் ஒழுங்கமைக்கப்பட வேண்டியனவாக உள்ளன.

இவ்வாறே மானிடப் புவியியலின் ஏனைய பல கிளைகளாகப் பண்பாட்டுப் புவியியல் (Cultural geography), பிராந்தியப் புவியியல் (Regional geography) சுற்றுலாப் புவியியல் (Tourism geography), மருத்துவப் புவியியல் (Medical geography), எனப் பல்வேறு கிளைகள் வியாபித்துக் காணப்படுகின்றன.

மானிடப் புவியியலுடன் தொடர்பான புவியியல் கற்கைகளுக்குப் பயன்படக் கூடிய நூல்களை ஒரே தொகுதியாக வைத்து ஒழுங்கமைக்கக் கூடிய வசதிகள் தூயிதசமப் பகுப்புத் திட்டத்தில் காணப்படவில்லை. அவற்றை அந்தந்தத் துறைகளுடன் இணைத்து ஒழுங்குபடுத்தும் தன்மையே நூலகங்களில் காணப்படுகின்றது.

4) **பகுப்பாக்கத் திட்டங்களில் புவியியல்**

புவியியலாளர்களதும் நுலகவியலாளர்களதும் ஒருமித்த கருத்துப்படி தூயி தசமப் பகுப்புத்திட்டமும் மற்றும் காங்கிரஸ் நூலக பகுப்புத் திட்டமும் துரிதமாக வளர்ந்துவரும் புவியியல் சார் பாடநூல்களை ஒழுங்கமைப்பதில் தெளிவான முறையை வழங்கவில்லை. அதாவது இவ்விரு பகுப்பாக்க திட்டங்களும் நவீன புவியியல் சார்ந்த ஆக்கங்களை பகுப்பாக்கம் செய்யக்கூடிய அளவிற்கு விசாலமான ஒழுங்கமைப்பினைக் கொண்டவை அல்ல. இவ்விரு முறைகளிலும் புவியியலின் பல்வேறு அம்சங்களையும் கொண்ட பாடநூல்களை

*Journal of Sri Lanka Library Review, Volume 36, Issue I1, June 2022, 100-120*
*DOI:http://doi.org/10.4038/sllr.v36i2.55*

நூலகமொன்றில் சிதறாமல் வைத்திருக்கத்தக்கதாக அவற்றினை ஒழுங்கமைக்க முடியாதுள்ளது (Meyer, 1947).

புவியியல் சார் பாடநூல்களும்,புவியியல் அறிஞர்களைப் பற்றிய ஆக்கங்களும்,தனித்துவமான புவியியல் தலைப்புக்களில் உள்ள நூல்களும்,மற்றும் புவியியல்துறைசார் நிபுணர்களால் கற்பிக்கப்பட்ட பாடவிதானங்களை உள்ளடக்கிய விரிவுரைக் குறிப்புக்களும் நூலகத்தின் புவியியல் சாரா அழைப்பு எண்ணினைக் (Call No.)கொண்டவையாக காணப்பட்டதனை,Meyer தன்னுடைய ஆய்வின் மூலமாக கண்டறிந்துள்ளார். இவ்வாறான வழக்கமானது ஒரு நூலகத்தில் காணப்படுமாயின் அந்நூலகத்திலே உள்ள நூல்கள் சிதறியதாகவும் சமச்சீரரற்றதாகவும் தருக்கமின்றியும் பட்டியலாக்கத்துக்குட்படுவதுடன் தவறான இறாக்கைப்படுத்தவும் (Shelving) வழிவகுக்கின்றது. மேலும்,இவ்வாறான நடைமுறைகள் காணப்படுவதானது நுலக பகுப்பாக்கத்தின் உண்மையான நோக்கத்தை தோல்வியடையச் செய்வதுடன் புவியியல் பகுதியின்(Geography Section) வினைத்திறனான பயன்பாட்டினை பாதிப்பிற்குள்ளாக்குகின்றது.

தகவல் யுகத்திலே நேரம் என்பது மிகவும் பெறுமதிவாய்ந்தது. ஆகையால்,நூலகத்திறகு வரும் வாசகர்களதும் திருப்தி மட்டத்தினை அதிகரிப்பதற்கு துல்லியமான பகுப்பாக்கம் இன்றியமையாதது (Araghi, 2009). பிரதானமாக புவியியல்சார் உள்ளடக்கங்களைக் கொண்டுள்ள நூல்களை புவியியல்சாரா நூல்களுள்ள பகுதியில் இறாக்கைப்படுத்துவதானது வாசகர்களதும் நுலகவியலாளர்களதும் திருப்பதியினை எதிர்மறையாக பாதிக்கின்றது.

தூயி தசம பகுப்பாக்கம் அதனுடைய முதலாவது பதிப்பில் இருந்து 23 ஆம் பதிப்பு வரையான பதிப்புக்களை ஆராய்ச்சி செய்தததனடிப்படையில் கலை மற்றும் அறிவியல் பாடங்களில் உள்ள பல பகுப்பாக்க விடயங்கள் கேள்விக்குட்படுத்தப்படக்கூடியவையாக உள்ளன (Saha&Hatua, 2019).

*Journal of Sri Lanka Library Review, Volume 36, Issue I1, June 2022, 100-120*
*DOI:http://doi.org/10.4038/sllr.v36i2.55*

## VI. Ma;tpd;gupe;JiufSk;KbTfSk;

சேகரிக்கப்பட்ட தரவுகளைக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட பகுப்பாய்வினடிப்படையில் பின்வரும் பரிந்துரைகள் இங்கு முன்வைக்கப்படுகின்றன.

i. புவியியல் சார்ந்த பாட நூல்களை புவியியலுக்கான பிரதான 910 வகுப்பின் கீழ் ஒழுங்கமைத்துக் கொள்வதை விட 550 என்ற வகுப்பின் கீழ் பௌதிகப் புவியியல் சார்ந்த நூல்களை ஒழுங்கமைக்கும் போது நுணுக்கமான அதே வேளை பௌதிகப் புவியியலுக்கான நூல்களை பெருமளவிற்கு ஒரே தொகுதியாகப் பேணக்கூடிய வாய்ப்பு ஏற்படும் என்பது உணரப்படுகின்றது. எனவே குறித்த நூலகம் இதில் எந்தக் குறியீடுகளைப் பயன்படுத்த உள்ளது என்பதை விடய அதிகாரக் கோவையாக (யுரவாழசவைல குடைந ழக ளூரடிதநஉவ ர்நயனiபெ) எழுத்து நிலையில் பேணுதல் வேண்டும். புவியியல் சார்ந்த நூல்களை ஒருசீரான முறையில் ஒழுங்கமைத்துக் கொள்ள இத்தகைய விடய அதிகாரக் கோவை அவசியமானது.

ii. பௌதிகப் புவியியலின் நான்கு பிரதான கிளைகளுள் ஒன்றாயுள்ள உயிரினப் புவியியல் என்பது உயிரிகளின் இயற்கை வரலாற்றுடன் தொடர்புடைய வகையில் தூயியின் (578.9) என்ற குறியீடு பொருத்தமானது. எனினும், இத்தகைய நூல்களை ஒழுங்கமைக்கும் போது 'பௌதிகப் புவியியல்' என்ற ஒரு விடயத்தலையங்கத்தை (ளூரடிதநஉவ ர்நயனiபெ) வழங்குவதன் மூலம் பௌதிகப் புவியியல் நூல்களை ஒரே தொகுதியாக வாசகர் பெற்றுக்கொள்ள வாய்ப்பு ஏற்படும்.

iii. புவியின் மேற்பரப்பில் பௌதிக மற்றும் பண்பாட்டுத் தகவல்கள், புவியின் உட்பாகம் பற்றிய தகவல்கள், கோள்கள், நட்சத்திரங்கள், புவிமேற்பரப்பில் மனிதனால் உருவாக்கப்பட்ட அம்சங்களான நிர்வாக எல்லைகள், அகலக்கோடு நெடுங்கோடு

போன்ற தகவல்கள் யாவும் படவரைகலையுடன் (ஊயசவழபசயிhல) தொடர்புடைய வகையில் உள்ளதால் 526, 526.7மற்றும் 526.9 ஆகிய பகுப்பு எண்களின் கீழ் ஒழுங்கமைத்துக் கொள்வது நுணுக்கமான கருத்துள்ள ஒழுங்கமைப்பைப் பேண உதவும்.

iv. மானிடப் புவியியலின் போக்குப் பரந்ததாகக் காணப்படுகின்றது. இதனால் இது பல்வேறு பாடத்துறைகளையும் இணைத்ததாகக் காணப்படுகின்றது. இதனைப் பின்வரும் அட்டவணை விளக்குகின்றது (அன்ரனி நோர்பேட், 2017).

## VII. ஆய்வின் பரிந்துரைகளும் முடிவுகளும்

சேகரிக்கப்பட்ட தரவுகளைக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட பகுப்பாய்வினடிப்படையில் பின்வரும் பரிந்துரைகள் இங்கு முன்வைக்கப்படுகின்றன.

i. புவியியல் சார்ந்த பாட நூல்களை புவியியலுக்கான பிரதான 910 வகுப்பின் கீழ் ஒழுங்கமைத்துக் கொள்வதை விட 550 என்ற வகுப்பின் கீழ் பௌதிகப் புவியியல் சார்ந்த நூல்களை ஒழுங்கமைக்கும் போது நுணுக்கமான அதே வேளை பௌதிகப் புவியியலுக்கான நூல்களை பெருமளவிற்கு ஒரே தொகுதியாகப் பேணக்கூடிய வாய்ப்பு ஏற்படும் என்பது உணரப்படுகின்றது. எனவே குறித்த நூலகம் இதில் எந்தக் குறியீடுகளைப் பயன்படுத்த உள்ளது என்பதை விடய அதிகாரக் கோவையாக (Authority File of Subject Heading) எழுத்து நிலையில் பேணுதல் வேண்டும். புவியியல் சார்ந்த நூல்களை ஒருசீரான முறையில் ஒழுங்கமைத்துக் கொள்ள இத்தகைய விடய அதிகாரக் கோவை அவசியமானது.

ii. பௌதிகப் புவியியலின் நான்கு பிரதான கிளைகளுள் ஒன்றாயுள்ள உயிரினப் புவியியல் என்பது உயிரிகளின் இயற்கை வரலாற்றுடன் தொடர்புடைய வகையில் தூயியின் (578.9) என்ற குறியீடு பொருத்தமானது. எனினும், இத்தகைய நூல்களை ஒழுங்கமைக்கும் போது “பௌதிகப் புவியியல்”என்ற ஒரு விடயத்தலையங்கத்தை (Subject Heading)வழங்குவதன் மூலம் பௌதிகப் புவியியல்

நூல்களை ஒரே தொகுதியாக வாசகர் பெற்றுக்கொள்ள வாய்ப்பு ஏற்படும்.

iii. புவியின் மேற்பரப்பில் பௌதிக மற்றும் பண்பாட்டுத் தகவல்கள்,புவியின் உட்பாகம் பற்றிய தகவல்கள்,கோள்கள்,நட்சத்திரங்கள்,புவிமேற்பரப்பில் மனிதனால் உருவாக்கப்பட்ட அம்சங்களான நிர்வாக எல்லைகள்,அகலக்கோடு நெடுங்கோடு போன்ற தகவல்கள் யாவும் படவரைகலையுடன் (Cartography) தொடர்புடைய வகையில் உள்ளதால் 526, 526.7 மற்றும் 526.9 ஆகிய பகுப்பு எண்களின் கீழ் ஒழுங்கமைத்துக் கொள்வது நுணுக்கமான கருத்துள்ள ஒழுங்கமைப்பைப் பேண உதவும்.

iv. மானிடப் புவியியலின் போக்குப் பரந்ததாகக் காணப்படுகின்றது. இதனால் இது பல்வேறு பாடத்துறைகளையும் இணைத்ததாகக் காணப்படுகின்றது. இதனைப் பின்வரும் அட்டவணை விளக்குகின்றது (அன்ரனி நோர்பேட், 2017).

**அட்டவணை2: மானிடப் புவியியலின் பரந்துபட்ட போக்கு**

| பாடநெறி | பொருளடக்கம் | னுனுஊ குறியீடுகள் |
|---|---|---|
| **மருத்துவப் புவியியல்** | மருத்துவம் சுகாதார ஆய்வுகள் | 610, 361 |
| **அரசியல் புவியியல்** | அரசறிவியல் | 320 – 328 |
| **நடத்தைப் புவியியல்** | உளவியல் | 150, 362.2 |
| **நகரப் புவியியல்** | நகர ஆய்வு மற்றும் திட்டமிடல் | 307. 6 |
| **சந்தைப் புவியியல்** | வியாபார நிர்வாகம் | 658 |
| **பொருளாதாரப் புவியியல்** | பொருளியல் | 330 – 339 |
| **கலாசாரப் புவியியல்** | மானிடவியல், சமூகவியல் | 300, 301, 304, 306 |

மூலம்: **Dewey, M. (2011). Dewey decimal classification and Relative index (23 ed.).**

*Journal of Sri Lanka Library Review, Volume 36, Issue I1, June 2022, 100-120*
*DOI:http://doi.org/10.4038/sllr.v36i2.55*

இவ்வாறான போக்கு மானிடப்புவியியலின் கிளைகள் சார்ந்து இனங்காணப்படுவதால் இவற்றின் பாட நூல்களும் நூலகத்தில் பரந்த நிலையிலேயே காணப்படும் சூழ்நிலை உள்ளது. இவற்றிற்கான நூல்களை வாசகர்கள் தேடிப்பெறுவது கடினமானதாக அமையும் நிலை உள்ளது. பொருத்தமான விடயத்தலைப்புக்களை நூல்களுக்கான பட்டியல் பதிவின்போது (Cataloguing)வழங்குவதன் மூலம் வாசகர் தேவையை நிறைவு செய்ய முடியும். இத்தகைய நூல்களை தேடி வருபவர்களுக்கு நூலக உசாத்துணை சேவை (Reference Survey)வழங்கப்படல் அவசியமாகிறது.

v. புவியியல்சார் கற்கை நெறியானது விஞ்ஞான ரீதியான அம்சங்களை அதிகளவில் தன்னுள் உள்வாங்கி வியாபித்துள்ளமை இவ் ஆய்வினூடாக இனங்காணப்பட்டுள்ளது. ஆகையால் விஞ்ஞான பாட நூல்களின் ஒழுங்கமைப்புப் பற்றிய அடிப்படை அறிவும் இத்துறை சார்ந்து கற்பவர்களுக்கு அவசியமாகியுள்ளது என்பதால் நூலகத்தில் உசாத்துணை சேவையை நன்கு விஸ்த்தரித்தல் அவசியமாகிறது.

vi. நூலக ஒழுங்கமைப்பு சார்ந்து எவ்வளவு தான் நுணுக்கமான ஒழுங்கமைப்பை ஆராய்ச்சி நூலகம் (Research Library) ஒன்று பேணிக் கொள்ள முயன்றாலும்கூட நன்கு திட்டமிடப்பட்ட வாசகர் கல்வி அல்லது தகவல் அறிதிறன் (Information Literacy) செயலமர்வும் வழிகாட்டலும் மாணவர்களுக்கு அவசியமாகிறது. பட்டதாரி மாணவர்களின் முதலாவது ஆண்டு தொடக்கம் இறுதியாண்டு வரை அவ்வப்போது நூலக வழிகாட்டல் ஆலோசனைகள் சீரான கால அட்டவணைப் படி வழங்குவதும் புவியியல் சார்ந்த ஆரோக்கியமான கற்றல் கற்பித்தலுக்கு உதவுவதாக அமையும்.

## VIII. முடிவுரை:

தூயி தசம பகுப்பாக்க திட்டத்தின் 23ம் பதிப்பின் படி பொதுவாக இன்றைய புவியியல் பாடநெறி சார்ந்த நூல்கள் முறையே 300 எனும்

குறியீட்டினை சர்ந்தும் 551,551.46,551.5, மற்றும் 910-919 போன்ற வௌ;வேறு வித்தியாசமான இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறான பெரும் இடைவெளி அடிப்படையிலான ஒழுங்கமைப்பு முறையானது நூலகங்களில் அத்துறை சார்ந்த வாசகருக்கு பெரும் சிரமங்களையும் நூல்களை கண்டறிவதில் தாமதங்களையும் ஏற்படுத்தும். இதேவேளை நாம் நூலகங்களில் நூலக ஒழுங்கமைப்பு முறை பற்றி குறிப்பிடும் தூயி தசம பகுப்பாக்க திட்டத்தினையும் நிராகரிக்க முடியாது. எனவே சில அதிகார பூர்வமான கோப்புக்களை (Authority File) பேணுவதன் மூலம் வாசகர்களுக்கு சிறந்த வழிப்படுத்தல் மூலமும் புவியியல்சார் நூல்களை புவியியல் வாசகர்கள் இலகுவாக பெற்றுக் கொள்ள முடியும் என்பதனை இவ்வாய்வு முடிவாக குறிப்பிடுகிறது.

**உசாத்துணைப்பட்டியல்**

அன்ரனி நோர்பேட்,எஸ்.(2014). உயிரினப் புவியியல்.சேமமடுபதிப்பகம்.

அன்ரனி நோர்பேட்,எஸ். (2017). பௌதிகப் புவியியல். செயன் முறையும் நிலவுருவங்களும். சேமமடுபதிப்பகம்.

இராஜேஸ்வரன்,ளு.வு.டீ. (1997) செய்முறைப் புவியியல். 1,நியூட்குறூப்.

குணராசா,க. (1997). மானிடப்புவியியல். ஸ்ரீ லங்கா வெளியீடு.

Araghi, G.F. (2005) Users Satisfaction Through Better Indexing. *Cataloging ClassificationQuarterly*, 40 (2), 5-17, https://doi.org/10.1300/J104v40n02_03

Dewey, M. (2011).*Dewey decimal classification and Relative index (23 d.)*. Dublin: OCLC Online Computer Library Center.

Meyer, A.H. (1947). A Geographic Classification of Geography material as based upon theDewey Classification system. *Annals of the Association*

*of American Geographers*, 37, (4), 209-222. http://www.jstor.org/stable/2561104

Saha, A, &Hatua, S.R. (2019). Treatment of Humanities as a discipline in DDC: SatarupaSahaand DrSudipRanjanHatua. *RBU Journal of Library & Information Science*, 21 (1), 96-102. http://www.rbu.ac.in/home/avz9s6ve0gq6/public_html/ckfinder/userfiles/files/RBU%20JOURNAL%20OF%20LIBRARY%20AND%20INFORMATION%20SCIENCE%20VOLUME%2022%2C2020(1).pdf